# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2054 ● செப்டம்பர் 30, 2023    Weekly E-paper ● September 30, 2023




## ‘வாச்சாத்தி’ வன்கொடுமை வரலாற்றின் கரும்புள்ளி!

சுப. வீரபாண்டியன்

**முறிந்த கூட்டணி முறியாத உறவு!**

மா.உதயகுமார்

**மீண்டும் எரியும் மணிப்பூர்**

தலையங்கம்

**சாதிக்கும் ஸ்டாலின்! ஏமாற்றும் மோடி!**

சாரததேவி

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2054 ● செப்டம்பர் 30, 2023 Weekly E-paper ● September 30, 2023


# ‘வாச்சாத்தி’ வன்கொடுமை வரலாற்றின் கரும்புள்ளி!

**சுப. வீரபாண்டியன்**

*வாச்சாத்தி!*

*கால ஓட்டத்தில் நம்மில் சிலர் இந்தப் பெயரை மறந்திருக்கலாம். அடுத்த தலைமுறையில் மிகப் பலர் இது குறித்து அறியாதிருக்கலாம்! ஆனாலும் வாச்சாத்தியில் நடைபெற்ற வன்கொடுமை நிகழ்வுகளை, வரலாறு மறக்காது - ஒருநாளும் மன்னிக்காது!*

*1992 ஜூன் 20, தர்மபுரி மாவட்டத்தில் உள்ள வாச்சாத்தி என்னும் கிராமத்தில் அந்த கொடூரங்கள் அரங்கேறின. அப்போது ஜெயலலிதா தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்தார். வீரப்பனைத் தேடும் படலம் என்னும் பெயரில், கிராமத்து மக்கள், பழங்குடியினர் பலர் மிகக் கொடுமையான சித்திரவதைகளை எதிர் கொண்டார்கள்.*

*அப்படித்தான் அந்த நாளில் அந்த கிராமத்தைச் சேர்ந்த நூற்றுக் கணக்கானவர்கள் காவல், வருவாய் மற்றும் வனத்துறையினரால் அழைத்துச் செல்லப்பட்டார்கள். அவர்களுள் எண்ணிக்கையில் பெண்களே மிகுதி.*

*அன்று காவல்துறையினர் வீரப்பனைத் தேடவில்லை.*



*அழைத்து வந்த பெண்களில் அழகானவர்களைத் தேடினார்கள். 18 பெண்களைப் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கினார்கள்.*

*ஜெயலலிதா அரசு அந்தக் குற்றவாளிகளைக் கண்டறிவதிலும், தண்டிப்பதிலும் அக்கறை காட்டவில்லை. 1996 ஆம் ஆண்டு அந்த வழக்கு சிபிஐ க்கு மாற்றப்பட்ட போது, 296 பேர் மீது குற்றப்பத்திரிக்கை தயாராயிற்று.*

*வழக்கை விசாரித்த தர்மபுரி செசன்ஸ் நீதிமன்றம், 15 ஆண்டுகளுக்குப் பிறகு 2011 இல் தீர்ப்பு வழங்கியது. 12 பேருக்கு 10 ஆண்டுகளும், 5 பேருக்கு 7 ஆண்டுகளும், பிறருக்கு ஒன்று முதல் மூன்று ஆண்டுகளும் சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. மொத்தம் 215 பேர் தண்டனை பெற்றனர்.*

*கூடுதல் தண்டனை பெற்ற 17 அதிகாரிகள், சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தனர். அந்த வழக்கு 10 ஆண்டுகள் விசாரணையில் இருந்தது. இப்போது ஒரு நல்ல தீர்ப்பு வந்திருக்கிறது! நீதிபதி வேல்முருகன், மேல்முறையீட்டு மனுவைத் தள்ளுபடி செய்து, தருமபுரி நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை அப்படியே உறுதி செய்து இருக்கிறது!*

*காலம் தாழ்ந்த நீதி, மறுக்கப்பட்ட நீதி (delayed justice is denied justice) என்று சொல்வார்கள். ஆனால் இந்த வழக்கில் காலம் தாழ்ந்தாலும், நேர்மையான தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. நீதிமன்றங்களின் மீது மக்களுக்கு நம்பிக்கை வந்திருக்கிறது.*

*வாச்சாத்தி மக்களின் மீது ஏற்படுத்தப்பட்ட ஆறாத காயங்களுக்கு, இப்போது ஆறுதலாவது கிடைத்திருக்கிறது!*



27-09-2023 அன்று திராவிடப் பள்ளி 4ஆம் ஆண்டு தொடக்க விழா அழைப்பிதழை மாண்புமிகு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் பொதுச் செயலாளர் சுப.வீரபாண்டியன் அவர்கள் நேரில் வழங்கினார்.

# முறிந்த கூட்டணி முறியாத உறவு!

மா.உதயகுமார்

தேர்தல் அரசியலில் பங்கேற்கும் கட்சிகளின் கூட்டணி, கொள்கைக் கூட்டணியாக இருப்பது அரிது. ஒரு கட்சியையோ அல்லது அந்தக் கட்சி சார்ந்த சித்தாந்தத்தையோ அதிகாரத்திற்குக் கொண்டு வருவதற்காக அமைக்கப்படும் கூட்டணி ஒரு வகை. அதை விட எந்தக் கட்சி அல்லது எந்தச் சித்தாந்தம் ஆட்சி அதிகாரத்திற்கு வந்து விடக்கூடாது என்பதற்காக அமைக்கப்படும் கூட்டணியே பொதுவாகத் தேர்தல் கூட்டணியாக இருக்கிறது.



அண்மையில் பாஜகவுடனான கூட்டணியை முறித்துக் கொண்டது அதிமுக. தமிழ்நாட்டில் புதியதொரு கூட்டணியை உருவாக்கப் போவதாகவும் அறிவித்திருக்கிறது. இவர்கள் யாரை ஆட்சியில் அமர்த்துவதற்காக அல்லது யார் ஆட்சிக்கு வருவதைத் தடுப்பதற்காகப் புதியதொரு கூட்டணியை உருவாக்கப் பார்க்கிறார்கள் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அதிமுக என்ன காரணத்திற்காக பாஜக கூட்டணியில் இருந்து வெளியேறி இருக்கிறது?

பாஜக ஆட்சியில் நடைபெறும் அவலங்களைப் பொறுத்துக் கொள்ள முடியாமலா?

பாஜக ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னர் மதச்சார்பற்ற தன்மை அகற்றப்பட்டு இந்துத்துவ மதவெறி தலைவிரித்தாடுவதைக் கண்டித்தா?

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சிகளைக் கவிழ்த்து ஜனநாயகப் படுகொலைகள் செய்யப்பட்டதை எதிர்த்தா?

சாமானிய மக்களின் அடிப்படைத் தேவைகளான சமையல் எரிவாயு, பெட்ரோல், டீசல், காய்கறி ஆகியவற்றின் விலை உயர்வைக் கண்டித்தா?

பாஜகவின் தமிழ் விரோத, தமிழர் விரோத அரசியல் செயல்பாடுகளைப் பொறுத்துக் கொள்ள முடியாமலா?

இப்படிப்பட்டவர்களிடம் அடுத்த முறையும் ஆட்சி அதிகாரம் வந்து சேர்ந்தால் நாடு என்ன கேடுகளைச் சந்திக்கும் என்பதைச் சிந்தித்துப் பார்த்தா?

இவற்றுள் எந்த ஒரு காரணத்திற்காகவும் கூட்டணியில் இருந்து விலகுவதாக அதிமுக தரப்பில் தெரிவித்ததாகத் தெரியவில்லை. தந்தை பெரியாரையும் அறிஞர் அண்ணாவையும் தரக்குறைவாக பாஜகவினர் பேசுவது இன்றுதான் அதிமுகவிற்குத் தெரிந்ததா அல்லது தற்போது அதிமுகவின் தலைவர்களாக இருப்பவர்களைப் பாஜகவினர் இழிவு செய்வது இதுதான் முதல் முறையா?

அவர்களுக்கு அண்ணாமலை என்கின்ற தனிநபர் மட்டுமே பிரச்சனையாக இருக்கிறார். நமக்குத் தனிநபர்கள் பிரச்சனையல்ல. கொள்கைதான் பிரச்சனை. மேலே குறிப்பிட்டுள்ள அனைத்துக் காரணங்களுக்காகவும் இன்னும் பல்வேறு மக்கள் விரோத செயல்பாடுகளுக்காகவும் நாம் பாஜகவை எதிர்க்கிறோம்.

அதிமுக நடத்துவது ஒரு நாடகம் என்பது பார்ப்பவர்கள் அனைவருக்கும் புரிகின்ற ஒன்று. ஆனால் இந்த நாடகம் தமிழ்நாட்டில் எடுபடாது என்பதைத் தமிழர்கள் அவர்களுக்கு உணர்த்துவார்கள். தமிழ்நாட்டைப் பொறுத்தவரை தற்போது பெரும்பான்மையானவர்களால் அரசியலில் ஓரங்கட்டப்பட்டுவிட்டது பாஜக. இது திராவிட இயக்கக் கொள்கையின் வெற்றி. ஆனால் அதேபோல பாஜக இந்திய அளவில் புறக்கணிக்கப்பட வேண்டும் என்றால் INDIA கூட்டணி இன்னும் வலுப்படுத்தப்பட வேண்டும்.

அதிமுக உருவாக்க நினைக்கும் கூட்டணியால் தமிழ்நாட்டில் இப்போது இருக்கிற INDIA கூட்டணியில் எந்த வகையிலும் விரிசல் ஏற்படுத்த முடியாது. அந்த அளவிற்குக் கொள்கைக் கூட்டணியாக இக்கூட்டணி இருப்பதைப் பார்க்க முடிகிறது. ஆனால் இக்கூட்டணி இப்போது போல் எப்போதும் பாஜக அகற்றப்படும் வரையில் தொடர வேண்டும். தொகுதிப் பங்கீட்டிற்காகவோ அல்லது வேறு சில ஆதாயங்களுக்காகவோ இக்கூட்டணியில் பிளவு ஏற்பட்டுவிடக் கூடாது.

அதிமுக பாஜகவிலிருந்து பிரிந்து வந்தாலும் தேர்தலுக்குப் பின்னர் சேரும் வாய்ப்புகளே அதிகம். அதிமுகவிலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் மக்களவை உறுப்பினர்கள் பாஜகவிற்கு ஆதரவளிக்கும் உறுப்பினர்களாகவே இருப்பார்கள் என்பதில் யாருக்கும் ஐயமில்லை. எனவே அதிமுக பாஜக கூட்டணி முறிந்ததே தவிர அவர்கள் உறவு முறியவில்லை. இந்த உண்மையைத் தமிழர்கள் உணர்ந்து INDIA கூட்டணியை வெற்றியடையச் செய்ய வேண்டும். ●










தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## மீண்டும் எரியும் மணிப்பூர்

ஏறத்தாழ 145 நாள்களுக்கும் மேலாக எரிந்து கொண்டிருக்கும் மணிப்பூரின் நெருப்பு இன்னும் அணைந்தபாடில்லை. அது கலவர பூமியாக அறிவிக்கப்பட்டு இருகிறது.

முடக்கப்பட்டிருந்த இணைய சேவையின் தடை விலக்கப்பட்டவுடன் மாணவர்கள் இருவர் கொலை செய்யப்பட்டுத் தெருவில் கிடந்த படமும், செய்தியும் வெளியானது.

தணிந்தது போலிருந்த மக்களின் கோபம் மீண்டும் போராட்டக் களத்தில் வந்து நின்றது. கொலை செய்யப்பட்ட மாணவர்களுக்காக நீதியும், அமைதியும் கேட்டு மாணவர்களும் போராட்டத்தில் இறங்கினார்கள்.

அவர்களுக்குக் கிடைத்தது தடியடி, கண்ணீர்ப் புகை மற்றும் பெல்லட் குண்டுகளின் துப்பாக்கிச் சூடு. காயங்கள், மரணங்கள் என்பது தொடர்கின்றன. மாநில பா.ஜ.க வின் முதல்வர் பைரன்சிங் அமைதியை ஏற்படுத்த முயலவில்லை. மணிப்பூரின் இந்த மோசமான நிலைக்கு பா.ஜ.க தான் காரணம் என்று தலைநகர் இம்பாலுக்கு அருகில் தௌபெல்லில் இருந்த பா.ஜ.க அலுவலகம் போராட்டக்காரர்களால் தீ வைத்து எரிக்கப்பட்டு உள்ளது. இப்பொழுது சி.பி.ஐ சிறப்பு விசாரணைக் குழு அங்கு செல்வதாக அரசு தரப்பில் இருந்து சொல்லப்பட்டு உள்ளது.


ஒரு மாநிலமே கொதிநிலையில் இருக்கிறது என்ற கவலை இல்லாமல், அதைப்பற்றிப் பேசாமல், அமைதி திரும்ப எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருக்கும் நாட்டின் பிரதமர் மோடியை நாடே கண்டித்தும் எந்தப் பயனும் இதுவரை இல்லை.

கலவரம் தொடங்கிய பின் காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி, நாடாளுமன்ற எதிர்க்கட்சிக் குழுவினர்கள் கூட மணிப்பூர் சென்று வந்தார்கள்.

ஆனால் பிரதமர் என்ற முறையில் மோடி மட்டும் அங்கு செல்லவில்லை. அதைத் தவிர பிற மாநிலங்களுக்கும், வெளிநாடுகளுக்கும் சளைக்காமல் சென்று வருகிறார்.

இது நாட்டின் பிரதமருக்கு அழகல்ல. ஜனநாயகத்தை மதிக்காதவர், சர்வாதிகாரப் பாதையில் செல்பவர் என்று மக்களால் பேசப்படும் மோடியின் கோடிக்கணக்கான ஊழல்கள், இனவெறி, மதவெறி, வெறுப்புணர்வுகளால் கொதித்துப் போயிருக்கிறார்கள் மக்கள். இதில் மணிப்பூரின் நெருப்பும் இணைகிறது. இந்தக் கொடுமைகளில் இருந்து நாடும், மக்களும் விடுபட வேண்டும்.

அதற்கு ஒரே வழி, 2024 பொதுத் தேர்தலில் மோடியின் பா.ஜ.கவை வீழ்த்த வேண்டும். 'இந்தியா' கூட்டணியை அரியணை ஏற்ற வேண்டும், வாக்குச் சீட்டுகளால் மக்கள்.




ஆசிரியர்:
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில்.இளங்கோவன்**

ஆசிரியர் குழு:
**வெற்றிச்செல்வன்**
**சாரதா தேவி**

வெளியீடு:
**திராவிட இயக்கத் தமிழர் பேரவை**

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்:
karunchattai@gmail.com

டுவிட்டர்: suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை– 600 024,

தொலைபேசி: 044-2472 6408

# சாதிக்கும் ஸ்டாலின்! ஏமாற்றும் மோடி!

**சாரதாதேவி**

தமிழ் நாட்டின் முதலமைச்சர் ஸ்டாலின் அவர்களின் அரசு 2021 மே மாதம் 7ஆம் நாள் பதவியேற்றது. அன்று முதல் இந்நாள் வரை தமிழ்நாட்டு மகளிருக்கு வந்தது நல்வாழ்வு!

அடுத்த நாளான மே 8 அன்று முதலமைச்சர் கையெழுத்திட்ட முதல் திட்டம் பெண்களுக்கான கட்டணமில்லாப் பேருந்துப் பயணத் திட்டம். தமிழ் நாட்டில் எல்லா மாவட்டங்களிலும் 30 கிலோமீட்டர் வரை அரசுப் பேருந்துகளில் மகளிர் கட்டணமில்லாமல் பயணிக்கலாம். முதலில் வேலைக்குப் போகும் பெண்கள் என இருந்தது பிறகு தளர்த்தப்பட்டு எல்லாப் பெண்களுக்கும் என விரிவுபடுத்தப்பட்டது. இதில் திருநங்கைகளும் அடங்குவர். ஆண்டுக்கு 1200 கோடி என போக்குவரத்துக் கழகங்களுக்கு நட்டம் ஈடுகட்டத் திட்டச் செலவும் ஒதுக்கப்பட்டது. 18 லட்சம் மகளிர் பயன்பெறுவர் என அறிவிக்கப்பட்டது. உள்ளபடியே எண்ணிக்கை கூடியிருக்குமே ஒழியக் குறைய வாய்ப்பில்லை. இத்திட்டத்தால் பெண்கள் அடைந்த போக்குவரத்தும், அவர்களுடைய சேமிப்பும், அவர்களுடைய பயண வசதியும் வரலாறு!

அடுத்து, 2022இல் செப்டம்பர் மாதம் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை அரசுப் பள்ளிகளில் படித்த மாணவிகளுக்கான உயர்கல்விக்கு உதவும் திட்டம்! பெண்களுக்கு மேற்படிப்பை வலியுறுத்தும், பட்டப் படிப்பு முடிக்கும் வரை மாணவிகளுக்கு மாதந்தோறும் ரூ.1000/- வழங்கும் புதுமைப் பெண் திட்டத்தை நடைமுறைப் படுத்தினார் முதல்வர். அதன் பயனாளிகள் 6 லட்சம் மாணவிகள்! திட்ட ஒதிக்கீடு ரூ.698 கோடிகள்!

அதே செப்டம்பர் மாதம் பேரறிஞர் அண்ணா பிறந்தநாளில், ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் தொடக்கப் பள்ளி மாணவர்களுக்குக் காலைச் சிற்றுண்டி திட்டத்தைக் கொண்டுவந்து ஏழை, உழைக்கும் வர்க்கத் தாய்மார்களின் மனதில் பால்வார்த்தார் முதலமைச்சர். தங்கள் குழந்தைகளுக்குக் காலை எழுந்து உணவு தயாரித்துத் தானும் வேலைக்கு ஓடோடும் பெண்களுக்கு எவ்வளவு பெரிய உதவி அது! அன்றாடம் காலை எழுந்து ரூபாய்10,20க்கு கூட வழியில்லாமல், குழந்தைகளைப் பட்டினியாகப் பள்ளிக்கு அனுப்பும் ஏழைத் தாய்மார்களின் கண்கள் ஆனந்தத்தால் கசிந்தன முதல்வரின் இந்தத் திட்டத்தால்! 31000 அரசுப் பள்ளிகளில் பயிலும் 17 லட்சம் மாணவர்களுக்கு இந்தத் திட்டம் போய்ச் சேருகிறது. ரூ.404 கோடி ஆண்டுத் திட்டச் செலவு ஒதுக்கப்படுகிறது.

நடப்பு ஆண்டான 2023இல் சொன்னபடி கொண்டு வந்துவிட்டார் மகளிர் உரிமைத் தொகையை, நம் முதல்வர்! இணையர்களே அங்கீகரிக்க மறுக்கும் குடும்பப் பெண்களின் உழைப்பை, உரிமையை ஓர்அரசு அங்கீகரித்து, அவர்களுடைய சொந்தத் தேவைகளுக்கென மாதம் ரூ.1000/- கொடுப்பது இத்திட்டம். 1.63 கோடி விண்ணப்பங்கள் வந்து அதில் 1.06 கோடி விண்ணப்பங்கள் ஏற்கப்பட்டு எல்லோர் கணக்குகளிலும் போய்ச் சேர்ந்துவிட்டது உரிமைத் தொகை! ஆண்டுக்கு ரூ.12000 கோடி திட்டச் செலவில் தமிழ்நாட்டில் மட்டும் தான் இது நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

இப்படி மகளிரின் உடல் நலன், மன நலன், குடும்ப நலன், சுகாதாரம், விடுதலை உணர்வு என எல்லாத் தளங்களிலும் அவர்களுடைய தேவைகளைச் சிந்தித்து, உயர்வான திட்டங்கள் தீட்டி, தமிழ்நாட்டு முதல்வர் சாதித்து வருகிறார்!

அப்படியே கொஞ்சம் ஒன்றியத்துக்குப் போவோம்!

செப்டம்பர் மாதம் 18 முதல் 22 வரை நாடாளுமன்றச் சிறப்புக் கூட்டத் தொடர். அப்படி என்ன அவசரம் வந்துவிட்டது? தலை போகும் அவசரமோ? அந்நிய நாட்டுப் படையெடுப்போ? மணிப்பூர் கலவரமோ? கலவரம் நடந்தபோதே வெளிநாட்டுச் சுற்றுலாவில் இருந்தார் மோடி? “இந்தியா” கூட்டணியின் ஒருங்கிணைப்பாளர் சோனியா அம்மையார் எழுதிக் கேட்டே விட்டார்கள், என்ன நிரல்? எதற்காக சிறப்புக் கூட்டம் என்று. ஏதோ பசப்பினார்கள், நான்கு மசோதாக்கள் என்று. ஆனால் திட்டம் வேறாக அல்லவா இருந்திருக்கிறது?

மகளிருக்கு 33% இடஒதுக்கீடு! மோடிக்கு 9 ஆண்டுகள் கழித்து, தேர்தல் நெருங்க, நெருங்க நாட்டின் பெண்கள் மீதெல்லாம் பார்வை திரும்புகிறது பாருங்கள்!

அதாவது, தொகுதி மறுசீரமைப்பு செய்யாமல், சாதி வாரிக் கணக்கெடுப்பு நடத்தாமல் கொண்டு வரமுடியாது என நிபந்தனைகளை நுழைத்துவிட்டு, மகளிர் இடஒதிக்கீடு மசோதாவை சிறப்பு நாடாளுமன்றக் கூட்டம் கூட்டி சட்டம் ஆக்கிவிடுவார்களாம்! அடுத்த நாடாளுமன்றம் இல்லை, அதற்கடுத்த நாடாளுமன்றத்திலும் நிறைவேற்ற முடியாத சட்டத்திற்கு என்னே ஒரு அலங்கார, அரங்கேற்ற நாடகம்? எப்படியான பூச்சுற்றல்?

சாதிக்கிறார் ஸ்டாலின்! ஏமாற்றுகிறார் மோடி!




Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian